# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கல்விமாணித் தேர்வு

## 2011/2012

## (2017 – July/AUGUST)

## EDS - 4153 கல்வி சமூகவியல் (Sociology of Education )

நேரம்: 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக

---

1. “கல்வித் துறையில் பணியாற்றுவோர் தன்பணியை சிறப்புடன் மேற்கொள்ள சமூகவியல் பற்றிய அடிப்படை விளக்கம் இருப்பது அவசியம்” இதனை அடிப்படையாகக் கொண்டு,

    I. கல்விச் சமூகவியல் என்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துக?

    (05 புள்ளிகள்)

    II. கல்விச் சமூகவியலின் அடிப்படைகள் நான்கினைக் குறிப்பிட்டுச் சுருக்கமாக விளக்குக?

    (08 புள்ளிகள்)

    III. ஆசிரியர்கள் தாம் கற்பித்தல் பணியை மேற்கொள்ளும்போது கற்பிக்கும் மாணவர்கள் வாழும் சமூகச் சூழல் பற்றிய தெளிவான புரிதல் அவசியமாகும். இந்த வகையில் கல்விச் சமூகவியலை அறிய வேண்டியதன் முக்கியத்துவங்கள் ஆறினைக் (06) குறிப்பிட்டு பொருத்தமான உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக?

    (12 புள்ளிகள்)

2. “கல்வியின் உந்துதல் காரணமாக காலவோட்டத்தில் சமூக பெயர்ச்சி ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்”

    I. சமூக நகர்வு (Social Mobility) என்ற எண்ணக்கருவை பொருத்தமான இரு உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக?

    (05 புள்ளிகள்)

    II. சமூக நகர்வில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஐந்தினை (05) குறிப்பிட்டு அவற்றினை நடைமுறை உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக?

    (10 புள்ளிகள்)

    III. இலங்கையின் கல்வி வாய்ப்புக்கள் மூலம் சமூக நகர்வு எவ்வாறு இடம்பெறுகின்றன என்பதை பொருத்தமான ஐந்து விடயங்களைக் சுட்டிக்காட்டி பொருத்தமான உதாரணங்களைக் கொண்டு ஆராய்க?

3. பாடசாலைகள் சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காகச் சமூகத்தினால் உருவாக்கப்பட்டதாகும். இதனால் பாடசாலை மீது அயற் சமுதாயத்தின் தாக்கம் இருப்பது தவிர்க்க முடியாதது என்பதை அடிப்படையாகக் கொண்டு,

I. பாடசாலைக்கும் அயற் சமூதாயத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டியதன் அவசியத்தை சுருக்கமாக விளக்குக?

(05 புள்ளிகள்)

II. அயற் சமுதாயத்தினால் பாடசாலை மீது ஏற்படுத்தப்படும் சாதக பாதக தாக்கங்களை விளக்குக?

(08 புள்ளிகள்)

III. பாடசாலைக்கும் அயற் சமுதாயத்திற்குமிடையில் தொடர்புகளைக் கட்டியெழுப்புதவற்காகப் பிரயோகிக்கக் கூடிய வழிமுறைகளை நடைமுறை உதாரணங்கள் மூலம் தெளிவுபடுத்துக?

(12 புள்ளிகள்)

4. "சமூகமயமாக்கல் தான் வாழும் சமூகச் சூழலினுள் ஓர் அங்கத்தவனாக நுழைவதற்கான தகுதியை வழங்கின்றது"

I. சமூகமயமாக்கல் (Socialization) என்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்தி, சமூகமயமாக்கல் நுட்பங்களை குறிப்பிடுக?

(05 புள்ளிகள்)

II. சமூகமயமாக்கல் செயன்முறையின் குறைபாடுகள் காரணமாகத் தோன்றும் சமூகப் பிரச்சினைகளைச் சுருக்கமாக விளக்குக?

(10 புள்ளிகள்)

III. தற்காலத்தில் சமூகமயமாக்கலை விரைவுபடுத்துவதில் நவீன ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கிய பங்காற்றுகின்றது. என்பதை நடைமுறைப் பிரயோகங்களைக் கொண்டு தெளிவாக்குக?

(10 புள்ளிகள்)

5. "சமூகத்தின் பல்வேறு விசைகளினால் சமூக வகுப்பு (Social Class) உருவாக்கம் என்பது தவிர்க்க முடியாத ஓர் அம்சமாக வளர்ச்சிடைந்துள்ளது"

I. சமூக வகுப்பு என்ற எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துக?

(05 புள்ளிகள்)

II. சமூக வகுப்பு உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் அம்சங்களைக் குறிப்பிடுக?

(06 புள்ளிகள்)

III. சமூக வகுப்பிற்கு ஏற்ப கல்வி வாய்ப்புக்கள் எவ்வாறு அமைகின்றன என்பதை நடைமுறை உதாரணங்கள் ஐந்தினைக் குறிப்பிட்டு விளக்குக?

(14 புள்ளிகள்)

6. பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

I. கல்வியும் சமூக மாற்றங்களும்

II. சமூக மயமாக்கல் முகவராக ஒப்பார் குழுவின் பங்கு

III. சமூகத் தொடர்பை ஊக்குவிப்பதில் பாடசாலை மேம்பாட்டுத் திட்டத்தின் பங்கு (Program for School Improvement – PSI)

(12.5x 2 = 25 புள்ளிகள்)